**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 183/2023**

**நாள்: 27.03.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 12

2024ம் ஆண்டு மார்ச் திங்கள் 27ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திரு. வீரையா என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வீரையா | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( எதிரி சுப்ரமணியன் என்ற அஜித் ஆஜர் )

<u>முதல் விசாரணை:</u>

நான் இராமநாதபுரம் தாலுகா, பனைக்குளம் கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். சலவைத்தொழில் செய்து வருகின்றேன். சாட்சிகள் ராணி, அனிதா, பால்பழனி ஆகியோரை எனக்குத் தெரியும். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என் சகோதரர் இறந்தது பற்றி மட்டும் எனக்குத் தெரியும். எவ்வாறு இறந்தார் என்று எனக்குத் தெரியாது. நான் வேறு எதுவும் கேள்விப்படவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**<u>அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், அப்போது நான் எனது தாயார் எனது உடன்பிறந்த தம்பி காளிமுத்துவின் வீட்டின் கடந்த 04.04.2023 ம் தேதியன்று இறந்துவிட்டார் என்றும், அவருக்கு 18.04.2023 ம் தேதியன்று 16 ம் நாள் காரியம் செய்வதற்காக நானும் மற்ற உறவினர்களும் என் உடன்பிறந்த தம்பி காளிமுத்து வீட்டிற்கு சென்றிருந்தோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

மேலும் எனது விசாரணையில், எனது உடன்பிறந்த தம்பி அதிகமாக மது அருந்தி கத்திக்கொண்டிருந்தார் என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் எனது உறவினர்கள் எனது தம்பி வீட்டில் சாப்பிடாமல் சென்றுவிட்டார்கள் என்று சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் அருகில் உள்ள எனது உறவினர் வீட்டில் தங்கியிருந்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

கடந்த 19.04.2023 ம் தேதியன்று இரவு 01.45 மணியளவில் என் தம்பி காளிமுத்து வீட்டிலிருந்து அழுகை சத்தம் கேட்டதால் நான் அங்கு சென்று பார்த்த பொழுது காளிமுத்து உச்சந்தலையில் இரத்தக்காயம் பட்டு கீழே கிடந்தார் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் சாட்சி ராணி, சண்முகவேலு, சுமதி ஆகியோர்கள் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அப்போது அந்த இடத்திற்கு இருட்டுரணியை சேர்ந்த வைரவன் மகன் ஆண்டி அங்கு வந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

நாங்கள் அனைவரும் சேர்ந்த மூப்பன்வலசையை சேர்ந்த பால்சாமி மகன் செல்வராஜ் என்ற ஆட்டோ டிரைவருக்கு போன் செய்து

வரச்சொன்னோம் என்றும், நானும் மற்றவர்களும் சேர்ந்து காயம்பட்ட காளிமுத்துவின் தலையில் மஞ்சள் பொடியை வைத்து அமுக்கினோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆட்டோ வந்தவுடன் அதில் என் தம்பி காளிமுத்துவை நானும், சாட்சிகள் ராணி, சுமதி, சண்முகவேலு ஆகியோர்கள் தாமரைக்குளம் மருத்துவமனைக்கு கொண்டு சென்று காண்பித்து பின் மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அதிகாலை 03.15 மணிக்கு கொண்டு சென்றோம் என்றால் சரியல்ல.

அங்கு காளிமுத்துவை பரிசோதித்த மருத்துவர் மேற்சொன்ன காளிமுத்து இறந்துவிட்டதாக என்னிடமும், மற்ற சாட்சிகளிடமும் சொன்னார் என்றால் சரியல்ல. நடந்த சம்பவம் சம்மந்தமாக அன்று காலை 10.00 மணிக்கு உச்சிப்புளி காவல் நிலையத்தில் அ.சா.1 ராணி புகார் கொடுத்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அன்றைய தினம் மருத்துவமனையில் இறந்த என் தம்பியின் உடலை பிரேத பரிசோதனைக்கு பிறகு பெறுவதற்காக நானும் மற்ற சாட்சிகளும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு 19.04.2023ம் தேதி சென்றிருந்தபொழுது சாட்சி பால்பழனியும், எனது தம்பி காளிமுத்துவின் மகள் அனிதாவும் சொல்லித்தான் நடந்த சம்பவங்கள் எனக்கு தெரியும் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

நாங்கள் அனைவரும் வீட்டிற்கு சென்ற பிறகு மேற்படி பால்பழனியிடம் எனது தம்பி காளிமுத்து தகராறு செய்ததால் மேற்படி பால்பழனி அனிதாவிற்கும், ஆஜர் எதிரி சுப்ரமணியனுக்கும் போன் செய்ததாகவும், மேற்படி அனிதாவும் சுப்ரமணியனும் TN 65 AF 7573 என்ற யமாகா ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு அன்று இரவு 01.00 மணிக்கு இருட்டுரணிக்கு வந்ததாகவும், அப்போது எனது உடன்பிறந்த சகோதரர் பால்பழனியை திட்டியதால் சத்தம் போடாமல் இருக்கச்சொல்லியும் கேட்காததால், கீழே கிடந்த

உருட்டுக்கட்டையை எடுத்து காளிமுத்துவின் தலையில் ஆஜர் எதிரி இரண்டு முறை அடித்ததாகவும், அதனால் காயம் அடைந்த காளிமுத்து கீழே விழுந்தவுடன் வண்டியை எடுத்துக்கொண்டு சாட்சி அனிதாவும், எதிரி சுப்ரமணியனும் கோரவள்ளிக்கு சென்றுவிட்டதாக கூறினார்கள் என்றும், இந்த சம்பவம் யாவும் நான் மருத்துவமனையில் இருக்கும் பொழுது கேள்விப்பட்டதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி என் தம்பி மகன் என்பதால் அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை அமர்வு நீதிபதி,
இராமநாதபுரம் .